


தனி பிரதி ரூ.10/-

Single Copy Rs.10/-

ANNUAL SUBSCRIPTION Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 51 | பாரிப்பு 6 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | பிப்ரவரி 2020 |
|---|---|---|---|
| KADHIR 51 | PAARIPPU 6 | THIRUVALLUVAR AANDU 2050 | FEBRUARY 2020 |


## பேரறிஞர் அண்ணா



## நினைவு நாள் 03-02-2020


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனி கிளையின் தலைவர் பொறியாளர் கே.சுந்தரப்பன் செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு தேனி மற்றும் மதுரை கிளை பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.சுதாகர் உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 6 (2019 - 2020)

# தொடரும்
# நம் பயணம் .......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட வழக்கு மீண்டும் திடீரென 09.01.2020 அன்று விசாரணைக்கு வந்தது. மறுபடியும் 13.01.2020 அன்று பட்டியலில் வந்து அன்று விசாரணைக்கு வரவில்லை.

இதற்கிடையில் இளநிலைப் பொறியாளர்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை எனவே 70 இளநிலைப் பொறியாளர்களுக்கு மட்டும் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கலாம் என்று முதன்மை தலைமைப் பொறியாளர் சார்பில் நமது சங்க பொறுப்பாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது. 70 இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க மையச்சங்க பொறுப்பாளர்களால் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் 21.01.2020 அன்று விரிவான விசாரணை நடைபெற்றது. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள் முதுநிலையை மதிப்பெண் அடிப்படையில் அமைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற அமர்வில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்கு 03.02.2020 அன்று விசாரணைக்கு வரும் என்றும் Advocate General தெரிவித்தார்.

மேலும் இளநிலைப் பொறியாளர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லாததால் 70 இளநிலைப் பொறியாளர்களுக்கு மட்டும் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க அனுமதிக்க வேண்டும் என்று Advocate General கோரினார். மாண்புமிகு தலைமை நீதியரசர் அவர்கள் அவ்வாறு வழங்கினால் விகிதாச்சாரம் imbalance ஆகும், சிக்கல் (Complicate) ஆகும் என்று தெரிவித்தார். வழக்கு 04.02.2020 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

03.02.2020 அன்று தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை சம்பந்தமான வழக்கு உச்சநீதிமன்றத்தில் வந்து 06.03.2020 அன்றைக்கு விசாரணைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

04.02.2020 அன்று உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழக்கு உயர்நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்து 12.02.2020 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு நீதிபதி கோர்ட்டில் நிலுவையில் உள்ள உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான 5 வழக்குகளையும் இந்த வழக்கோடு இணைத்து விசாரிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற நீதியரசர் மாண்புமிகு D.முருகேசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஊதிய குறை தீர்க்கும் பிரிவு 21.01.2020 அன்று தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தது. பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு நமது கோரிக்கைகளை வலியுறுத்தினோம். இளநிலைப் பொறியாளர்களுக்கும், உதவிப் பொறியாளர்களுக்கும் சம ஊதியம் வழங்க வேண்டும் என்பதை மிக அழுத்தமாக வலியுறுத்தி இருக்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

**W.P.Nos.35161, 33373 and 34153 of 2019**

**THE HON'BLE CHIEF JUSTICE**

**and**

**SUBRAMONIUM PRASAD, J.**

The challenge raised in the present petitions is to the validity of Section 47 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, on several grounds, but, in this case, primarily on the ground that once the directly recruited Assistant Engineers, who were ranked on the basis of roster, have succeeded in a challenge raised to the same resulting in the ranking to be made on the basis of the marks obtained, any temporary promotion by invoking Section 47 would be in the teeth of the said judgment and even otherwise, Section 47 should be read in a manner so as not to violate the constitutional provisions.

2.We have heard learned counsel for the petitioners and the learned Advocate General, who informs that the Division Bench judgment of this Court dated 15.11.2019 in W.P.No.998 of 2018 and other connected petitions is under challenge before the Apex Court and is likely to come up very shortly and therefore, any preemptive attempt being made by the petitioners to forestall the invoking of the powers by the State Government under Section 47 would be seriously prejudicial to the interest of the Departments concerned, inasmuch as there is an extreme urgency requiring postings of Assistant Executive Engineers (Civil), as a large number of posts are lying vacant.

3.On the other hand, learned counsel for the petitioners submits that the State Government is trying to achieve indirectly which it has been prohibited to do directly by trying to avoid the judgment dated 15.11.2019 as well as other judgments, which the State Government should be injuncted from doing so and the mere filing of a Special Leave to appeal does not allow the State Government to proceed to make temporary promotions in violation of the judgment, which is in favour of the petitioners.

4.Having considered the same, we find that in order to avoid any further complication and as urged by the learned Advocate General, let the State Government keep such number of posts of Assistant Executive Engineers reserved as the number of petitioners herein and further to proceed with any temporary promotions as proposed only after obtaining the leave of the Court, for which we post the matter on 04.02.2020, leaving it open to the parties to inform the Court about the outcome of the Special Leave to Appeal filed before the Apex Court.

(A.P.S., CJ.) (S.P., J.)
21.01.2020
The Hon'ble Chief Justice
and
Subramonium Prasad, J.

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் R.குருசாமி, இளம்பொறியாளர் அவர்கள் 23.01.2020 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஈரோடு கிளையின் மூத்த உறுப்பினர் பொறியாளர் K.S.கந்தசாமி, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 21.01.2020 அன்று கோபிசெட்டிபாளையத்தில் இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.தனசேகர், இளம்பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி M.இராமாயி அம்மாள் அவர்கள் 25.01.2020 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் C.பாலமுரளிதரன், உதவிப்பொறியாளர் அவர்களின் தந்தையார் திரு.M.சேர்மத்துரை அவர்கள் 17.01.2020 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனி கிளையின் தலைவர் பொறியாளர் K.சுந்தரப்பன், செயற்பொறியாளர் அவர்களின் இளைய மருமகன் திரு.V.அருண் அவர்கள் 06.02.2020 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் K.M.சண்முகம் உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5

முன்னிலை: பொறி. கு.இராமமூர்த்தி, பி.இ, எம்.பி.ஏ.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து

செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4) / 35180 / 2016, நாள். 23.01.2020

பொருள்: பணியமைப்பு - பொதுப்பணித்துறை - த.நா.பொ.சா.ப.தொகுதி - திருவாளர்கள் திரு. கே.போஸ், பி.இரத்தினசாமி, ஆர்.ஜி.மணிவேலன் மற்றும் சி.சின்னதம்பி தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு ஒருங்கிணைந்த முதுநிலை வரிசை (Inter -se-Seniority) திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டது. - இளநிலைப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியல் 2012-2013 மற்றும் 2013-2014 - வெளியிடப்பட்டது. தேர்ந்த பெயர் பட்டியலில் (Inter -se-Seniority) ஊடாக சேர்த்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4) / 25180/2016 நாள்.23.03.2016
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4) / 25180/2016 நாள்.24.03.2016
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.4(3) / 58333/2011 நாள்.03.01.2020
4. தனியர்களின் விண்ணப்பங்கள் நாள். 09.01.2020.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4) / 25180/2016 நாள்.13.01.2020.

பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை மூலம் திருவாளர்கள் கே.போஸ், பி.இரத்தினசாமி, ஆர்.ஜி.மணிவேலன் மற்றும் சி.சின்னதம்பி ஆகிய தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு, தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான ஊட்டுப்பதவிகளின் ஒருங்கிணைந்த முதுநிலை வரிசை (Inter -se-Seniority) எண்ணானது தமிழ்நாடு அரசு பணியாளர் (பணிநபந்தனைகள்) சட்டம்-2016ன் பிரிவு 40(2)ன் படி திருத்தி, முதுநிலை வரிசை எண்.11ல் இடம்பெற்றுள்ள திரு.ஜி.விஜயசேகர், கீழாகவும், முதுநிலை வரிசை எண்.12ல் இடம் பெற்றுள்ள தனியர்களை விட இளையவரான திரு.கு.சரவணன் அவர்களுக்கு மேலாகவும் வைத்து தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான ஊட்டுப்பதவிகளில் ஒருங்கிணைந்த முதுநிலை வரிசை (Inter-se-Seniority) பின்வருமாறு நிர்ணயம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

பணிமாற்றம் மூலம் பல்வேறு பதவிகளிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) ஆக பதவி உயர்வு வழங்கும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட முதுநிலைப்பட்டியல்

| வ. எண் | அரசாணை | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | கல்வித் தகுதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் / தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட்ட நாள் | தொழில்நுட்ப உதவியாளராக பதவி ஏற்ற நாள் | இளநிலைப் பொறியாளராக பதவி ஏற்ற நாள் | துறைத் தேர்வு தேர்ச்சி பெற்ற பாகம் 1 | பாகம் 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | | ஜி.விஜயசேகர் | 26.04.71 | DCE | 01.01.90 | 01.01.90 | 12.11.2009 | 01.03.2016 | May 2010 | May 2010 |
| 11 a | அரசாணை (நி) எண்.334 பொப(சி2) துறை, நாள் 19.10.2007 (ம) அரசாணை 235/நாள் 30.12.2017. | க.போஸ் பணி ஆய்வாளர் தரம் - 2 | 02.05.63 | DCE | 01.01.93 | 01.01.93 31.12.94 மு.ப | 16.04.18 | | Dec 2009 | Dec 2009 |
| 11 b | அரசாணை (நி) எண்.334 பொப(சி2) துறை, நாள் 19.10.2007 (ம) அரசாணை 235/நாள் 30.12.2017. | பூ.இரத்தினசாமி பணி ஆய்வாளர் தரம் - 2 | 07.05.63 | DCE | 01.07.95 | 01.07.95 / 30.06.97 | 18.04.18 | | May 2008 | May 2009 |
| 11 c | அரசாணை (நி) எண்.134 பொப(சி2) துறை, நாள் 07.05.2010 | ஆர்.ஜி.மணிவேலன் பணி ஆய்வாளர் தரம் - 2 | 02.06.64 | DCE | 01.07.95 | 01.07.95 / 14.09.02 பி.ப | 30.04.18 | | Dec 2011 | May 2011 |
| 11 d | அரசாணை (நி) எண்.334 பொப(சி2) துறை, நாள் 07.05.2010 | சி.சின்னதம்பி பணி ஆய்வாளர் தரம் - 2 | 04.01.62 | DCE | 01.01.96 | 01.01.96 / 31.12.97 பி.ப | 22.06.18 | | Dec 2008 | Dec 2008 |
| 12 | கருணை அடிப்படை | கு.சரவணன் | 16.03.69 | DCE | 01.03.98 | 01.03.98 | 31.12.09 AN | 01.03.16 FN | Dec 2010 | Dec 2010 |

2. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் இளையவரான திரு.கே. சரவணன் அவர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டு 01.03.2016 முற்பகல் முதல் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவியில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

3. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் - 2016ன் பிரிவு 40(2)ல் "பணியில் முதியவரை விட முன்னதாக ஒரே முறையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியில் இளையவர், இளையவர் பணியேற்ற நாள் முதல் பணியில் முதியவர் பணியேற்றதாக கருதப்படுவார்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இதனப்படையில் பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் மூலம் மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் முதுநிலை வரிசை எண் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டதை தொடர்ந்தும், பார்வை 4ல் காணும் தனியர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையிலும், திருவாளர்கள் கே.போஸ், பி.இரத்தினசாமி, ஆர்.ஜி.மணிவேலன் மற்றும் சி.சின்னதம்பி ஆகியோர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பதவி உயர்வு வழங்க, 2012-2013 மற்றும் 2013-2014 ஆண்டின் இளநிலைப் பொறியாளர்களுக்கான ஒப்பளிக்கப்பட்ட தேர்ந்த பெயர்பட்டியலில், தனியர்களைவிட முதுநிலையில் முதியவரான வரிசை எண்.12ல் இடம் பெற்ற திரு.ஜி.விஜயசேகர், அவர்களுக்கு கீழாகவும், தனியர்களைவிட முதுநிலையில் இளையவரான வரிசை எண்.13ல் இடம் பெற்ற திரு.கே.சரவணன், அவர்களுக்கு மேலாகவும் வைத்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக 2012-2013 மற்றும் 2013-2014 தேர்ந்த பெயர் பட்டியலில் பின்வருமாறு திருத்தி நிர்ணயம் செய்யப்படுகின்றது. பணியில் இளையவரான திரு.கே.சரவணன், அவர்கள் பதவி உயர்வில் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியேற்ற நாளான 01.03.2016 முற்பகல் முதல் மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கும் இளநிலைப் பொறியாளர்கள் (சிவில்) ஆக பதவி உயர்வானது கருத்தியலாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் - 2016ன் பிரிவு 40(2)ன் படி வழங்கப்படுகிறது.

பிப்ரவரி 2020

2012-13 (ம) 2013-14 ஆம் ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவிக்கான ஒருபகுதி மாற்றமாக திருத்தியமைக்கப்பட்ட தேர்ந்த பெயர்பட்டியல்

| பெயர் / பிறந்த தேதி (ம) பதவி (திருவாளர்கள்) | ஏற்கனவே தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) ஊட்டுப் பதவியில் நிர்ணயம் செய்யப்பட்ட முதுநிலை வரிசை எண். | தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) பதவியில் திருத்திய நிர்ணயம் செய்யப்பட்ட கருத்தியலான முதுநிலை வரிசை எண் | தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) பதவியில் கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டதாக கருதப்படும் நாள் | கல்வித் தகுதி | துறைத் தேர்வு தேர்ச்சி பெற்ற நாள் கணக்கு பாகம் 1 (ம) 2 | ஏற்கனவே வழங்கப்பட்ட 2012-13 (ம) 2013-2014 ஆம் ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் வரிசை எண் | தற்போது வழங்கப்படும் 2012-13 (ம) 2013-2014ம் ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவிக்கான கருத்தியலாக திருத்தி அமைக்கப்பட்ட தேர்ந்த பெயர்ப்பட்டியல் வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜி.விஜயசேகர் (26.04.1971) தொழில்நுட்ப உதவியாளர் | 11/2009 | - | - | DCE | - | 12 | - |
| க.போஸ் (02.05.1963) தொழில்நுட்ப உதவியாளர் | 1/2017-2018 | 11 a / 2009 | 31.12.2009 பிற்பகல் | DCE | Dec 2009 | - | 12 a |
| பூ.இரத்தினசாமி (07.05.1963) தொழில்நுட்ப உதவியாளர் | 2/2017-2018 | 11 b / 2009 | 31.12.2009 பிற்பகல் | DCE | May 2008 & May 2009 | - | 12 b |
| ஆர்.ஜி.மணிவேலன் (02.06.1964) தொழில்நுட்ப உதவியாளர் | 3/2017-2018 | 11 c / 2009 | 31.12.2009 பிற்பகல் | DCE | Dec 2011 & May 2011 | - | 12 c |
| சி.சின்னதம்பி (04.01.1962) தொழில்நுட்ப உதவியாளர் | 4/2017-2018 | 11 d / 2009 | 31.12.2009 பிற்பகல் | DCE | Dec 2008 | - | 12 d |
| கு.சரவனன் (16.03.1969) தொழில்நுட்ப உதவியாளர் | 12/2009 | - | - | DCE | - | 13 | - |





பொறியியல் கதிர்

5. மேற்காணும் தனியர்களுக்கு 2012-2013 மற்றும் 2013-2014 இளநிலைப் பொறியாளர் (சிவில்) தற்காலிக தேர்ந்த பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்ட இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 40(2) ன் படியும், தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதங்கள் 2017ன் படி, நிலை எண். 13 - 35900 - 113500 என்ற ஊதிய விகிதத்தில் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக இவர்களுக்கு இளையவரான திரு.கு.சரவணன், இளநிலைப் பொறியாளர், பதவியில் பணியேற்ற நாளான 01.03.2016 முற்பகல் முதல் கருத்தியலாக பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கப்படுகிறது.

6. மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கு வழங்கப்படும் கருத்தியலான பதவி உயர்வு தொடர்பான பணப்பயன்களை தனியர்கள் தமிழ்நாடு அரசு அடிப்படை விதி 27ன் துணை விதி 17ன் படி பெறத்தகுதியுடையவர்களாவார்கள்.

7. இப்பதவி உயர்வினைத் தொடர்ந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம் / வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

8. இவர்கள் உரிய அலுவலர்களிடமிருந்து மறு பணியமர்வு ஆணையினைப் பெற்று உரிய இடங்களில் 10 தினங்களுக்குள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பணியில் சேர வேண்டும் எனவும், அவ்வாறு பணியில் சேரத் தவறினால் இவர்களுக்கு இளநிலைப் பொறியாளர் (சிவில்) - ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்ட ஆணை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் எனவும், இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான உரிமையினை துறப்பு செய்ததாக கருதப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தங்கள் பதவி உயர்வு உரிமையினைத் துறப்பதாக இருந்தால் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிகமாக துறக்க வேண்டும் என்றும் அதற்கான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

9. இவர்கள் இளநிலைப் பொறியாளராக (சிவில்) பணியில் சேருமிடத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் கல்வித் தகுதி, பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம் மற்றும் சொந்த தாலுகா/மாவட்டம் குறித்தான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

10. இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியில் சேர்ந்த விவரத்தினை உரிய மாறுதல், பொறுப்பு மாற்று சான்றுடன் (CTC) உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இத்திருத்திய முதுநிலை நிர்ணயம் மற்றும் அதன் பொருட்டு நிகழும் பதவி உயர்வு போன்றவை தவறு என பின்னர் தெரியவரின் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - பிற்சேர்க்கை

ஒம்/ கு.இராமமூர்த்தி
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து

முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து, (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), அலுவலகம்,
பொ.ப.துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005.

பிற்சேர்க்கை

**இளநிலைப் பொறியாளர் (சிவில்) - ஆக பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் விவரம்**

| வ. | பெயர் / பதவி (ம) பிறந்த தேதி (திருவாளர்கள்) | தற்பொது பணிபுரியும் அலுவலகம் | இளநிலைப் பொறியாளராக (சிவில்) பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. | K.போஸ்<br>தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்)<br>02.05.1963 | வைப்பாறு வடிநில உபகோட்டம், விருதுநகர். | பாசனப்பிரிவு எண். 2, மதுரை<br>பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் எண்.1, மதுரை.<br>பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை.<br>பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை.<br>தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை. |
| 2. | B.இரத்தினசாமி<br>தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்)<br>07.05.1963 | திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், கும்பகோனம் | திட்டம் (ம) வடிவமைப்பு பிரிவு எண். 1, அரியலூர்.<br>திட்டம் (ம) வடிவமைப்பு உபகோட்டம், அரியலூர்.<br>திட்டம் (ம) வடிவமைப்பு கோட்டம், திருச்சி.<br>திட்ட உருவாக்கம் வட்டம், திருச்சி.<br>தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை. |
| 3. | R.G.மணிவேலன்<br>தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்)<br>02.06.1964 | திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், திருவாரூர். | திட்டம் (ம) வடிவமைப்பு பிரிவு எண். 2, திருத்துறைப்பூண்டி.<br>திட்டம் (ம) வடிவமைப்பு உபகோட்டம், திருத்துறைப்பூண்டி.<br>திட்டம் (ம) வடிவமைப்பு கோட்டம், தஞ்சாவூர்.<br>திட்ட உருவாக்கம் வட்டம், திருச்சி.<br>தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை. |
| 4. | C.சின்னதம்பி<br>தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்)<br>04.01.1962 | காவிரி வடிநில கோட்டம் தஞ்சாவூர். | சிறப்பு திட்டம் (ம) வடிவமைப்பு பிரிவு எண். 2, திருச்சி.<br>சிறப்பு திட்டம் (ம) வடிவமைப்பு உபகோட்டம், எண்.1, திருச்சி.<br>சிறப்பு திட்டம் (ம) வடிவமைப்பு கோட்டம், திருச்சி.<br>திட்ட உருவாக்கம் வட்டம், திருச்சி.<br>தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை. |

ஒம்/ கு.இராமமூர்த்தி
முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து, மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொபது

பிப்ரவரி 2020
பொறியியல் கதிர்

## 2020 ஆம் ஆண்டு ஓய்வு பெற உள்ள ஆட்சி அலுவலர், இளம் பொறியாளர், உதவிப்பொறியாளர் அவர்களது பெயர் பட்டியல்

| வ.எண். திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவி | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| **ஜனவரி 2020** | | | |
| 1. M. பாலகிருஷ்ணன் | 03.01.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், பொபது, கிருஷ்ணகிரி. |
| **பிப்ரவரி 2020** | | | |
| 1. A. விசுவமித்திரன் | 03.02.1962 | உ.பொ | வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர். |
| 2. S. மணிகண்டன் | 08.02.1962 | உ.பொ | 18ஆம் கால்வாய் நீட்டிப்பு, சிறப்பு கோட்டம், தேனி. |
| 3. A. அடைக்கண் | 11.02.1962 | இ.பொ | அரியாறு வடிநிலக் கோட்டம், திருச்சி. |
| 4. N. பாஸ்கர் | 03.02.1962 | இ.பொ | சிறப்பு திட்டக் கோட்டம்,நீ.ஆ.து., கடலூர். |
| 5. S. ஜெயக்குமார் | 19.02.1962 | இ.பொ | கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில். |
| 6. V. வேல்முருகன் | 10.02.1962 | இ.பொ | தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், கோவை. |
| **மார்ச் 2020** | | | |
| 1. P. துரை | 26.03.1962 | ஆ.அ | த.பொ, பொபது, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீஆது, சென்னை. |
| 2. R. ஜெகதீஸ்வரன் | 01.04.1962 | ஆ.அ | கட்டட (க & ப) வட்டம், திருநெல்வேலி. |
| 3. T.S. சுப்பிரமணியன் | 25.03.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், மதுரை. |
| 4. S. தண்டபானி | 15.03.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், (ம.ப), திருப்பூர். |
| **ஏப்ரல் 2020** | | | |
| 1. R. மூர்த்தி | 10.04.1962 | ஆ.அ | வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர். |
| 2. P. பாண்டிவேல் | 12.04.1962 | ஆ.அ | கட்டட (க & ப) வட்டம், மதுரை. |
| 3. L. மனோகரன் | 10.04.1962 | ஆ.அ | கட்டட (க & ப) வட்டம், சேலம். |
| 4. S. பத்மா | 22.04.1962 | ஆ.அ | வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர். |
| 5. சி. தமிழ் செல்வி | 07.04.1962 | ஆ.அ | க.பொ, பொபது, நீஆது, திட்ட உருவாக்கம், சேலம். |
| 6. M. பீர் அப்பா | 10.04.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திருநெல்வேலி. |
| 7. K. இராமநாதன் | 12.04.1962 | உ.பொ | கட்டிடம் தரக்கட்டுப்பாடு கோட்டம், மதுரை. |
| 8. T. தர்மலிங்கம் | 25.04.1962 | உ.பொ | கனிமம் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், திருச்சி. |

| | | | |
|---|---|---|---|
| 9. M. இளங்கோ | 05.04.1962 | உ.பொ | கட்டிடம் தரக்கட்டுப்பாடு கோட்டம், மதுரை. |
| 10. V.M. வினோத்குமார் | 13.04.1962 | உ.பொ | தாமிரபரணி வடிநில கோட்டம், திருநெல்வேலி. |
| 11. S. யசோதா | 27.04.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திருச்சி |
| 12. P. பாலசுப்பிரமணியன் | 18.04.1962 | இ.பொ | சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல். |
| 13. G.S. ஐயப்பன் | 23.04.1962 | இ.பொ | கட்டட (க & ப) வட்டம், (ம.ப)., திருச்சி. |
| 14. K. செங்கோடன் | 10.04.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், கிருஷ்ணகிரி. |
| 15. U.V. சண்முகஸ்ரீ | 21.04.1962 | இ.பொ | தரக்கட்டுப்பாடு கோட்டம், நீஆது, மதுரை. |
| **மே 2020** | | | |
| 1. P. இராமசந்திரன் | 13.05.1962 | ஆ.ஆ | பவானி வடிநில வட்டம், நீஆது, ஈரோடு. |
| 2. M. சிதம்பரம் | 31.05.1962 | ஆ.அ | கட்டட (க & ப) வட்டம், திருச்சி - 1. |
| 3. P. சொர்ணராஜ் | 17.05.1962 | ஆ.ஆ | பாலாறு வடிநில வட்டம், நீஆது, சென்னை - 5. |
| 4. R. விஜயலட்சுமி | 10.05.1962 | ஆ.ஆ | த.பொ, பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 25. |
| 5. R. ஜெயராமன் | 27.05.1962 | உ.பொ | நீரியல் கோட்டம், நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி. |
| 6. V. கண்ணன் | 09.05.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம் - 2, (ம.ப), சென்னை - 5. |
| 7. S. சண்முகாநன்தன் | 19.05.1962 | உ.பொ | கட்டட (பராமரிப்பு) கோட்டம், சென்னை - 5. |
| 8. M. சென்ராம் | 30.05.1962 | உ.பொ | 18ஆம் கால்வாய் நீட்டிப்பு, சிறப்பு கோட்டம், தேனி. |
| 9. K.N. ரஞ்சன் | 25.05.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், கோயம்புத்தூர். |
| 10. M. சிவ குருநாதன் | 23.05.1962 | உ.பொ | கனிமம் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், தஞ்சாவூர். |
| 11. R. வெங்கடாசலமணி | 13.05.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், ஈரோடு. |
| 12. A. சின்னகண்ணு | 03.05.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், பொபது, திருச்சி. |
| 13. R. ராதாகிருஷ்ணன் | 26.05.1962 | இ.பொ | நில நீர் கோட்டம், கடலூர். |
| 14. V.R. ராகவேந்திரன் | 20.05.1962 | இ.பொ | மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம், திருவண்ணாமலை. |
| 15. T.S. ரவி | 22.05.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், திருவண்ணாமலை. |
| 16. S. ராஜ் | 17.05.1962 | இ.பொ (மி) | மின் கோட்டம் - 2, சேப்பாக்கம், சென்னை - 5. |

| | | | |
|---|---|---|---|
| **ஜூன் 2020** | | | |
| 1. K. குணசேகரன் | 01.07.1962 | ஆ.அ | கட்டட (க & ப) (ம.ப), வட்டம், திருச்சி. |
| 2. மூ. கலைச்செல்வி | 07.06.1962 | ஆ.அ | த.பொ, (ம) இயக்குநர் அலுவலகம், பொபது, நீர் ஆய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு, நீஆது, சென்னை. |
| 3. R. ராஜகோபால் | 13.06.1962 | உ.பொ (ப.நீ) | கட்டட (பராமரிப்பு) கோட்டம், (ம.ப)., சென்னை - 5. |
| 4. R. பாலசுப்ரமணியன் | 20.06.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், தஞ்சாவூர். |
| 5. A. சீதாபதி | 02.06.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், சேலம். |
| 6. S. முனைவர் பாட்ஷா | 30.06.1962 | இ.பொ | சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல். |
| 7. N. இராமநாதன் | 17.06.1962 | இ.பொ | கீழ் பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம். |
| 8. R. ஸ்ரீதரன் | 01.07.1962 | இ.பொ | கட்டட (க & ப) கோட்டம், நாகப்பட்டினம். |
| **ஜூலை 2020** | | | |
| 1. S. கண்ணன் | 20.07.1962 | உ.பொ | அக்னியாறு வடிநில கோட்டம், புதுக்கோட்டை. |
| 2. J. ராஜகோபால் | 31.07.1962 | உ.பொ | கட்டட (க & ப) கோட்டம், நாமக்கல். |
| 3. V. ராஜேந்திரன் | 29.07.1962 | உ.பொ | மேல் பாலாறு வடிநில கோட்டம், வேலூர். |
| 4. R. சேகர் | 05.07.1962 | உ.பொ | காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர். |
| 5. M.P.K. விஜி | 29.07.1962 | உ.பொ | த.பொ, பொபது, நீஆது, இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை - 5. |
| 6. M. கலா ரஜினி | 27.07.1962 | இ.பொ | தென் மாநகர கோட்டம், சேப்பாக்கம், சென்னை - 5. |
| 7. R. ரமேஷ் பாபு | 22.07.1962 | இ.பொ (மி) | மின் கோட்டம் - 1, சென்னை - 5. |
| **ஆகஸ்ட் 2020** | | | |
| 1. ரெ. சுப்ரமணி | 12.08.1962 | ஆ.அ | சுற்றுச் சூழல் குழும வட்டம், நீஆது, திருச்சி - 20. |
| **செப்டம்பர் 2020** | | | |
| 1. V. ஜெயரங்கன் | 02.09.1962 | ஆ.அ | தலைமைப் பொறியாளர், நீஆது, மதுரை மண்டலம், மதுரை. |
| 2. B. முத்துலெட்சுமி | 02.09.1962 | ஆ.அ | த.பொ, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை - 113. |
| 3. S. ஜானகி | 24.09.1962 | ஆ.அ | பெண்ணையாறு வடிநில வட்டம், நீஆது, திருவண்ணாமலை. |
| 4. R. நல்லுசாமி | 10.09.1962 | உ.பொ | மருதையாறு வடிநில கோட்டம், அரியலூர் |
| **அக்டோபர் 2020** | | | |
| 1. M. மார்ட்டின் லூயிஸ் | 10.10.1962 | ஆ.அ | க.பொ, பொபது, நீஆது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 20. |

| | | | |
|---|---|---|---|
| 2. N. சித்தார்த்தன் | 10.10.1962 | இ.பொ | மருதையாறு வடிநில கோட்டம், அரியலூர். |
| **நவம்பர் 2020** | | | |
| 1. M. திருநாவுக்கரசு | 08.11.1962 | இ.பொ | ஆற்றுப்பாதுகாப்புக் கோட்டம், திருச்சி. |
| **டிசம்பர் 2020** | | | |
| 1. T.M. சகாய இளங்கோ | 06.12.1962 | உ.பொ | சிற்றாறு வடிநில கோட்டம், தென்காசி. |

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2019 /நாள் 31.01.2020ன் படி 31.01.2020 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | M. பாலகிருஷ்ணன் | 03.01.1962 | உதவிப் பொறியாளர் |
| 2. | C. சின்னத்தம்பி | 04.01.1962 | இளநிலைப் பொறியாளர் |

**ஒம்/- கு.இராமமூர்த்தி**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து-, (ம),**
**தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 38 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.01.2020)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | C. நம்பிராஜன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 2. | K. சுந்தரப்பன் | செயற்பொறியாளர் |
| 3. | P. கருணாநிதி | உதவி செயற்பொறியாளர் |
| 4. | K. சுந்தரராஜீ | உதவி செயற்பொறியாளர் (மின்) |
| 5. | M. சுதாகர் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | R. குணசேகரன் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 7. | P. சிதம்பரம் | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் முன்னாள் பொருளாளர் பொறியாளர் S.கந்தசாமி, உதவிப் பொறியாளர் அவர்களது மகளின் திருமணத்தை முன்னிட்டு நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் பொறியாளர் K.C.மனவேதன்ராஜா, இளம்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் மணமக்களை மனதார வாழ்த்தி சங்க வளர்ச்சி நிதியாக ரூ.1500/- (ஆயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொறுப்பாளர் பொறியாளர் பி.கருணாநிதி உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொதுச்செயலாளர் மற்றும் முன்னாள் அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் வாழ்த்து தெரிவித்தனர்.





## உறுப்பினர்களின் கவனத்திற்கு

சென்னை பொறியியல் இல்லத்தில் மாத வாடகையில் (Monthly Rent) தங்குவதற்கு மாத வாடகை கட்டணமாக ரூபாய் 5000/- (ஐயாயிரம் மட்டும்) என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**- இல்லக்காப்பாளர்**

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகள்



# இயங்கும் உலகம்

## திருச்சி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளையின் பொதுக்குழுக் கூட்டம், புதுவருட கூட்டம் மற்றும் பணி ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு விழா, திருச்சி மன்னார்புரம், பொறியாளர் முருகானந்தம் இல்லம், ஹம்ஜா-கேசவராவ்-அடைக்கலதுரை அரங்கில் 04.01.2020 அன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமை வகித்தார். கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் எஸ்.தங்கையன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பொறியியல் சங்க மாநிலத் தலைவர் பொறியாளர்எஸ்.பாஸ்கரன் அவர்களும், மாநில துணைத் தலைவர் பொறியாளர் சி.பி.மோகன்குமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் தமது உரையில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வினை பெற்றுத்தருவதற்காக நமது தமிழ்நாடு பொறியயில் சங்க மையச் சங்கப் பொறுப்பாளர்கள் மிகச்சீரியமுறையில் சட்டரீதியாக சங்க ரீதியாகவும் அலுவக ரீதியாகவும் இடைவிடாது தலைமைச் செயலத்தினை அணுகியும் விரைந்து பெற்றிட அரும்பாடுபட்டு வருவதை பாராட்டியும் வெற்றிகிட்டும் வரை தகுதியான உறுப்பினர்களை பொறுமையுடன் சங்கத்தின் மேல் நம்பிக்கையுடன் இருக்க கேட்டு கொண்டார். ஏழாவது ஊதியக்குழு பரிந்துரையில் நமது பொறியாளர்களுக்கு உள்ள ஊதிய முரண்பாடுகளை களைந்து நல்ல தீர்வு பெற்றுத்தரும்படி மையச்சங்கத்தினை வேண்டிக் கேட்டுக்கொண்டார். மேலும் சங்கத்தின் வழக்கு நிதியினையும், சென்னையில் உள்ள இல்லக் கட்டித்தின் புனரமைப்புப் பணிகளின் நிலுவைத் தொகைக்காகவும் உறுப்பினர்கள் தாராளமாக நன்கொடை வழங்கிட கேட்டுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து கிளையின் செயலாளர் பொறியாளர் கே.ஆர்.ஜெயராமன் அவர்கள் தமது உறையில் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வினை விரைவில் பெற்றுத்தரும்படி மையச்சங்கத்தினை வேண்டிக் கேட்டுக் கொண்டும் கிளைக்கட்டிடத்திற்கு பாதாளசாக்கடை இணைப்பிற்கும் குடிநீர் இணைப்பிற்கும் இதர பராமரிப்பு செலவினங்களுக்கும் உறுப்பினர்கள் தாராளமாக நிதி உதவி செய்து ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக் கொண்டார். பின்னர் கிளையின் பொருளாளர் பொறியாளர் எஸ்.சி.எஸ்.முரளிதரன் அவர்கள் கிளையின் உறுப்பினர்கள் தவறாது உறுப்பினர் கட்டணங்களை செலுத்தி வழக்குநிதி மற்றும் இல்ல பராமரிப்புகளுக்கு ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள் மாநிலத்தலைவர்கள் அவர்களும் மாநில துணைத்தலைவர் அவர்களும் பொன்னாடை அனுவித்து கௌரவிக்கப்பட்டனர். பின்னர் தமிழ்நாடு பொறியியல் சங்க மாநிலத்தலைவர் தமது உரையில்

உறுப்பினர்களுக்காகவும் உறுப்பினர்களது மேன்மைக்காகவும் மையச்சங்கம் அரும்பாடுபட்டு வருவதையும் சங்கத்தின் மீது நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டு தமிழ்நாடு பொறியியல் சங்க மாநிலப் பொதுச்செயலாளர் பொறியாளர் டி.முருகேசன் அவர்கள் இரவு பகல் பாராமல் பல்வேறு இன்னல்கள் தடங்கல்களையும் தாண்டி சங்க நலனுக்காகவும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு அரும்பாடு பட்டு செயல்பட்டு வருவதை பாராட்டியும் பேசினார். கிளை உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் மையச்சங்கப் பொறுப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிடவும் கேட்டுக்கொண்டார். உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பற்றி பல்வேறு வழக்குகளை சந்தித்து அதனை முறியடித்து விரைவில் பதவி உயர்வு ஆணை பெற அனைத்து துரித நடவடிக்கைகளை மையச்சங்கம் எடுத்துவருகிறது எனவும் விரிவாக பேசினார்.

மேலும் சங்கம் சந்தித்துவரும் பல்வேறு வழக்குகளை நடத்தி வெற்றி பெற்றிடும் வகையில் தாராளமாக வழக்கு நிதி வழங்கிடவும் இல்ல புனரமைப்பு நிலுவைத் தொகைக்கு கட்டிட நிதி வழங்கிடும் படியும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து மாநில துணைத்தலைவர் பொறியாளர் சி.பி.மோகன்குமார் அவர்கள் தமிழ் நாடு பொறியியல் சங்கம் சந்தித்து வரும் பல்வேறு வழக்குகளையம் பதவி வாரியாக தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திலும் தலைமைச் செயலகத்திலும் மாநிலப் பொதுச்செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்களும் இதர மையச்சங்க பொறுப்பாளர்களும் இணைந்து எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைளையும் மிக விரிவாக எடுத்துரைத்தார். பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் வேண்டும் என்பதையும் இளம் பொறியாளர் பணிமூப்பு பட்டியல் தமிழ்நாடு தேர்வாணையின் மூலம் இளம் பொறியாளர் தேர்வு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வில் நாளது தேதி வரை கடந்து வந்த வழக்குகள் மற்றும் இன்னல்கள் பற்றியும் மிக விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், உறுப்பினர்கள் கருத்துக்களுக்கும், சந்தேகங்களுக்கும் மாநில துணைத்தலைவர் மிக அருமையாக பதிலளித்தார்.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு பொறியியல் சங்க திருச்சி கிளை கீழ்கண்ட உறுப்பினர்கள் வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்றவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இந்த பாராட்டு விழா கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொறியாளர்கள் வி.வில்வேந்தன், செயற்பொறியாளர் (ஓய்வு), கே.எம்.சண்முகம், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு), டி.வீரையன், முன்னாள் கிழக்கு மண்டல செயலாளர், எஸ்.முகமது கமால், இளம்பொறியாளர் (ஓய்வு).

பணி ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு கிளையின் சார்பாக பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பொறி.ஆர்.தயாளகுமார், பொறி.என்.சிவகுருநாதன், பொறி.சி.பி.மோகன்குமார் பொறி.எஸ்.கந்தசாமி ஆகியோர் பதவி ஓய்வு பெற்ற பொறியாளர்களை பாராட்டி பேசினார்.

பிறகு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தங்களது ஏற்புரையில் தங்கம் செய்யாததை சங்கம் செய்து சாதனைபடைத்து வருகிறது எனவும் உறுப்பினர் ஒற்றுமையுடனும்

நம்பிக்கையுடனும் இருந்து சங்கத்தினை வலுப்பெறச்செய்ய வேண்டும் எனவும் மனநெகிழ்வுடன் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஓய்வுதியம் கணக்கீட்டின் போது NMR SERVICE-ல் வருடத்திற்கு 240 நாட்கள் கருத்தில்கொண்டு 50% அதாவது ஐந்து வருடங்களை கணக்கில் எடுத்து கொள்ள ஆவண செய்யுமாறு இக்கிளை வலியுறுத்துகிறது.

2. உதவி செயற் பொறியாளர் பதவிகளை தகுதியுற்ற பொறியாளர்களுக்கு காலதாமதமின்றி விரைவில் பெற்றுத்தரவும் மைய சங்கத்தினை திருச்சி கிளை கேட்டுக்கொள்கிறது.

## மதுரை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொபது, மதுரை கிளையின் 2020ம் ஆண்டிற்கான புத்தாண்டு பொதுக்குழு கூட்டம் 04.01.2020 சனிக்கிழமை காலை நடைபெற்றது. தமிழ்தாய் வாழ்த்துடன் கூட்டம் ஆரம்பமானது. அவை அறிமுகத்திற்கு பின் கிளை துணைத்தலைவர் பொறி. B.இராமசுப்ரமணியன் அவர்கள் வரவேற்றார். பின் சிறப்பு அழைப்பாளர் மற்றும் மையச்சங்க பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. பின்னர் கிளைத்தலைவர் பொறி.A.திருவேங்கடமூர்த்தி அவர்கள் தனது உரையில் நமது சங்க நடவடிக்கைகள் குறித்து நல் உரையாற்றினார்.

தொடர்ந்து கிளைச்செயலாளர் பொறி.V.இரவிச்சந்திரன் அவர்கள் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து அவையில் எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து கிளைப்பொருளாளர் பொறி.J.சீனிவாசன் அவர்கள் 31.12.2019 வரையிலான கிளை வரவு, செலவு விபரங்களை அவைக்கு வழங்கி ஒப்புதல் பெற்றார். அதன் பின் மைய மண்டலச்செயலாளர் பொறி.V.பரமசிவம் அவர்கள் தெள்ளு தமிழில் சிறப்பானதொரு உரை நிகழ்த்தினார்.

பின்னர் மாநில துணைத்தலைவர் பொறி.C.P.மோகன்குமார் அவர்கள் மையச்சங்க செயல்பாடுகள் குறித்து ஈர்ப்பு மிக்க தொரு உரையாற்றினார். பின்னர் உறுப்பினர் கருத்துகளை முன்னாள் மாநிலத்தலைவர் பொறி.S.லீலாவதி, உறுப்பினர்கள் K.போஸ், N.சந்திரன், மூத்த பொறியாளர்கள் S.நந்தகுமார், K.மூத்துகருப்பன், M.சவரிராஜ், N.கோவிந்தராஜன், S.சேகர் ஆகியோர் எடுத்துரைத்தனர். பின்னர் பின்னர் நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உதவிப்பொறியாளர்கள் / இளநிலைப்பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வை விரைவில் பெற்றுத்தர மையச்சங்கத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

2. இளம்பொறியாளர்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறது.

3. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் நியமித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள மையச்சங்கத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

திருமுருகன் திருவருள் துணைக்கொண்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீ விகாரி வருடம், தை மாதம் 22 -ம் தேதி **(05.02.2020) புதன்கிழமை** ஏகாதசி திதியும், மிருகசீரிடம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 09.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள்ளாக மீனம் லக்னத்தில்

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்,

தெய்வத்திரு D.துளசிராமன் முதலியார் - T.சியமளா அவர்களின் பௌத்திரனும்,

**திரு.T.முரளி - திருமதி. M.வள்ளி** தம்பதியரின் குமாரனுமான திருநிறைச்செல்வன்

## M. ஜெயகுமார் DME.,

**(Senior Engineer - Wabco India Ltd., Chennai)**

என்கிற வரனுக்கு

சென்னை - 21, பழைய வண்ணார்ப்பேட்டை,

தெய்வத்திரு.B.பலராமன் முதலியார் - B.நவநீதம்மாள்

அவர்களின் பௌத்திரியும், **திரு.B.செல்வராஜ் - திருமதி.S.சாந்தகுமாரி**

தம்பதியரின் மூத்த குமாரத்தி திருநிறைச்செல்வி

## S.அம்மு (எ) சௌமியா MBA.,

**(Senior Associate - OLAM IS Pvt.Ltd.)**

என்கிற கன்னிகையை

இல்வாழ்க்கை துணைவியாக்க பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் மேற்படி சுபமுகூர்த்தம் திருவள்ளூர், எண்.1, 60 அடி J.J.ரோடு, V.M.நகர், நகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள **ரோஸ் மஹால் A/C திருமண மண்டபத்தில்** நடைபெறும் திருமணத்திற்கும், தாங்கள் தங்கள் சுற்றமும், நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள,

**T.முரளி - திருமதி. வள்ளி முரளி**
இளம்பொறியாளர், பொதுப்பணித்துறை,
தலைமைச்செயலகம், சென்னை - 9.
எண்.11, வீரா நகர்,
திருவள்ளூர் - 602 001.
செல்: 98402 95754.

பஸ் ரூட் : 82C, 97 , 153 , 201, 501, 572, 597
இறங்குமிடம்: திருவள்ளூர் பஸ் டிப்போ

# தியாகச்செம்மல் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்களின் முத்து விழா மற்றும் மலர் வெளியீடு அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம், வாழ்த்துக்கள், தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்களின் முத்து விழா பின்வரும் விவரப்படி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில் தாங்கள் முன்கூட்டியே வருகை புரிந்து விழாவினை சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டுகின்றோம்.

**நாள்:** 15.02.2020 சனிக்கிழமை காலை 10.30 மணி

**இடம்:** பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கம்,
பொறியியல் இல்லம், 19/10, லால் முகமது தேரு,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

**தலைமை: பொறிஞர் ம.பா.கோதண்டராமன்,**
மாநிலத் துணைத்தலைவர் - REAT, சென்னை.

**வரவேற்புரை: பொறிஞர் N.பசுல்லா கான்,**
மாநில அமைப்பு செயலாளர், REAT.

**விழா தொகுப்பாளர்: பொறிஞர் M.ஊர்க்காவலன்,**
மாநில பொதுச்செயலாளர், REAT.

**நூல் அறிமுக உரை: பொறிஞர் சி.இராமசாமி,** செயற்பொறியாளர் (ப.நி),
பொபது, மற்றும் மலர்க்குழுத்தலைவர், சேலம்.

**முத்து விழா மலர் வெளியிடுபவர்: மூத்தப் பொறியாளர் இரா.வெங்கடசுப்பு**
முந்நாள் தலைவர், TNEA, DECT & REAT.

**பிரதிகளை பெற்றுக் கொள்பவர்கள்:**

1. Er.**D. முருகேசன்,** பொதுச்செயலாளர், TNEA, சென்னை.
2. Er.**S. பாஸ்கரன்,** பொதுச்செயலாளர், DECT, சென்னை.
3. Er.**M. ஊர்க்காவலன்,** பொதுச்செயலாளர், REAT, விருதுநகர்.
4. Er.**V.V. சிதம்பரம்,** - AIFODE, காஞ்சிபுரம்.
5. Er.**S.பெரியசாமி,** வேளாண்மை பொறியியல் துறை, மதுரை.
6. Er.**S. பாஸ்கரன்,** மாநிலத்தலைவர், TNEA, வேலூர்.
7. Er.**R.நாகன் பிள்ளை,**முன்னாள் துணைத்தலைவர், TNEA.

**ஏற்புரை:** தியாகச்செம்மல் **பொறிஞர். சி.ப.சண்முகம்**

**நன்றியுரை: திரு.A.சந்திரசேகரன்,** Ashok Leyland.
சி.ப.சண்முகம் அவர்களின் மூத்த மருமகன்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் புத்தாண்டு பொதுக்குழு கூட்டத்தில் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் வி.வில்வேந்தன், கே.எம்.சண்முகம், டி.வீரையன், எஸ்.முகமதுகமால்ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.












Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.



தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொறுப்பாளர் பொறியாளர் பி.கருணாநிதி உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு மாநிலத்தலைவர் வாழ்த்து தெரிவித்தார்.




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on 11.02.2020**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,